பக்கங்கள் 17+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 03 செவ்வாய்க்கிழமை 19.08.2025 | அதிர்வு 19

## தென்னிலங்கையில் இன்று ஒருவர் சுட்டுப்படுகொலை



தென்னிலங்கையில் இன்று ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா, பேலியகொடை, ஞானரத்ன 04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

UNHCR
The UN Refugee Agency

# தமிழ் அகதிகளை அழைத்து வருவதை நிறுத்தியது ஐ.நா.!

## இலங்கை அரசின் கெடுபிடிப் போக்குக் காரணமாக

போரால் இடம்பெயர்ந்த பின்னர், சுய விருப்பின் பேரில் நாடு திரும்ப விரும்பும் அகதிகளை இலங்கைக்குக் கூட்டி வந்து இங்கு மீளக் குடியேற்றும் தனது செயன்முறையை இலங்கை அரசுத் தரப்பின் முறையற்ற கெடுபிடிப் போக்குக் காரணமாக நிறுத்தி வைத்துள்ளது ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் அமைப்பான UNHCR (ஐ.நா. அகதிகள் தூதரகம்).

மீளழைத்து வரப்படும் தமிழ் அகதிகள் இலங்கைக்கு வந்தவுடன் கைது செய்யப்படலாம் என்று சந்தேகிக்கப்படும் நிலைமை காணப்படுவதால் இலங்கைத் தமிழ் அகதிகளை நாட்டுக்குக் கூட்டிவரும் செயன்முறையை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தூதரகம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

04▶

# முத்துஐயன்கட்டு இளைஞரின் மரணம்: 4 இராணுவத்தினர் தொடர்ந்து மறியலில்

- அடையாள அணிவகுப்பில் இருவரை அடையாளம் காட்டிய சாட்சிகள்
- பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சுமந்திரன் தலைமையில் சட்டத்தரணிகள் பலர் முன்னிலை

(பா.சதீசன்)

முல்லைத்தீவு, முத்துஐயன்கட்டு இளைஞரின் மரணம் தொடர்பான சம்பவத்தையொட்டி ஏற்கனவே கைதான மூன்று இராணுவத்தினருக்கு மேலதிகமாக நான்காவது இராணுவத்தினர் ஒருவர் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் சந்தேகநபர்கள் நால்வரும் இன்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்தனர். சந்தேகநபர்கள் நால்வரையும் ஒரு வார காலத்துக்கு - எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

முன்னதாக இன்று காலை இந்த வழக்கையொட்டி 04▶





# நல்லூர் கந்தனில் இன்று சிறப்பாக நடைபெற்ற மாம்பழத் திருவிழா!

**(எஸ்.நிதர்ஷன்)**

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற் சவத் திருவிழாவின் 22ஆம் நாளான திருவிழாவான மாம்பழத் திருவிழா (தெண்டாயுதபாணி உற்சவம்) இன்று சிறப்பாக நடைபெற்றது.

காலை 6.45 மணியளவில் நடை பெற்ற வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து பிள்ளையாரும் முருகப் பெருமானும் வெளிவீதியுலா வந்தனர்.

இந்த மாம்பழத் திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்த அடியார்கள் கலந்துகொண்டனர். அத்தோடு முருகப் பெருமான் தங்க மயில் வாகனத்தில் எழுந்தருளி இருந்தார்.

இதேவேளை, புராணக் கதையை மையமாகக் கொண்டே ஒவ்வொரு வருடமும் இந்தத் திருவிழா இடம்பெற்று வருகின்றது.

அதற்கமைய ஒரு சமயம் சிவபெரு மானுக்கும் உமாதேவியாருக்கும் நாரதர் மாம்பழமொன்றை வழங்கினார்.

அதனை யாருக்குக் கொடுப்பது எனத் தீர்மானிக்க, முதலில் உலகைச் சுற்றி வருபவருக்கே இந்த மாம்பழத் தைத் தருவோம் என சிவபெருமானும் உமாதேவியாரும் பிள்ளையாருக்கும், முருகனுக்கும் கூறினர்.

உடனே முருகப் பெருமான் மயில் மீதேறி உலகைச் சுற்றிவரச் சென்றபோது, பிள்ளையார் சிவபெருமானையும் உமாதே-தவியாரையும் சுற்றி வந்து நீங்களே என் உலகம் எனக் கூறி மாம்பழத்தைப் பெற்றுக்கொண்டார்.

உலகைச் சுற்றி வந்த முருகனுக்கு மாம்பழம் கிடைக்காததால் தனது நகை, உடை அனைத்தையும் துறந்த முருகன், ஆண்டிக் கோலத்தில் பழனி மலையில் போய் அமர்ந்தார். இந்தப் புராணக் கதையை மையமாக வைத்தே இந்தத் திருவிழா இடம்பெற்று வருகின்றது.









# சம்மாந்துறையில் கஞ்சா, பணத்துடன் நால்வர் ஊழல் தடுப்பு பிரிவால் கைது!

**(தில்சாத் பர்வீஸ்)**



கஞ்சாவை விற்பனை செய்த சந்தேக நபர்களையும், தன்வசம் வைத்திருந்தது சந்தேக நபர்களையும் சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு கஞ்சா மற்றும் ஒரு தொகை பணத்தையும் சம்மாந்துறை ஊழல் தடுப்பு பிரிவினர் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (18) திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லரிச்சல் பகுதியில் கஞ்சாவை விற்பனை செய்த சந்தேக நபர்களைச் சம்மாந்துறை ஊழல் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சம்மாந்துறை ஊழல் தடுப்பு படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, கல்லரிச்சல் 01 பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும், தனமலவில பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும், உடங்கா 02 பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும், புளக் ஜே மேற்கு 02 பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும் இவ்வாறு கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதான சந்தேக நபர் ஒருவரிடம் இருந்து 350 கிராம் கஞ்சாவும், மற்றைய சந்தேக நபரிடம் இருந்து 250 கிராம் கஞ்சாவும், மற்றைய சந்தேக நபரிடம் இருந்து 1400 மில்லிகிராம் கஞ்சாவும், மற்றைய சந்தேக நபரிடம் இருந்து 1000 மில்லிகிராம் கஞ்சா மற்றும் ஒரு தொகை பணமும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள், பணம் உள்ளிட்ட சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், குறித்த கைது நடவடிக்கை கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் நெறிப்படுத்தலில், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ். ஜெயலதின் வழிகாட்டுதலில், பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி என்.றிபாய் டீன் தலைமையிலான குழுவினர் இந்தக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டனர் .

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நுவரெலியா மாவட்ட வீதி அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டது 2,500 மில்லியன் ரூபா நிதி



**(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )**

வீதி அபிவிருத்தி பணிக்காக நுவரெலியா மாவட்டத்துக்கு 2500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு மேற்கொண்டுள்ளது என்று போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஹட்டன் பஸ் தரிப்பிடத்துக்குக் களவிஜயம் மேற்கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் களவிஜயத்தின் போது நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுள சுரவீர ஆராய்ச்சி மற்றும் கிருஷ்ணன் கலைச்செல்வி, ஹட்டன் டிக்கோயா நகரசபை தலைவர் அசோக்க கருனாரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

நுவரெலியா மாவட்டத்திற்கான அபிவிருத்தி கூழு உறுப்பினர்களை இன்று தெரிவு செய்தோம். நுவரெலியா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதிகமான பிரச்சினைகள் காணப்படுகின்றன. ரயில், பஸ், பாடசாலை சேவைகளில் ஈடுபடும் வான், ஓட்டோ போன்றவை முறையான பாராமரிப்பும் இல்லை. அதற்கான வசதிகளும் இங்கு இல்லை. மலையக பெருந்தோட்ட மக்கள் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கு பாதைகள் தொடர்பான பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

ரயில், இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் ஆகியன அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இங்கு இலங்கை போகாகுவரத்துச் சபையும் தனியார் துறையையும் நோக்கும் போது கோபக்கார்கள் போல் காணப்படுகின்றனர். தனியார் பஸ்ஸும் இலங்கை போக்குவரத்து சபையினரும் பாரிய கஷ்டத்துக்கு மத்தியில் வாகனங்களைச் செலுத்துகின்றனர். அடுத்த வருடத்துக்குள் வரையறுக்கப்பட்ட நேர அட்டவாணையின் படி இரு சாரர்களும் செயற்பட வேண்டும். இரு சாராரும் சில விடயங்களைத் திருத்தி கொள்ள வேண்டும்.

நாங்கள் ஆட்சிக்கு வந்து அரச உத்தியோகத்தர்களுக்குச் சம்பளத்தை அதிகரித்திருக்கின்றோம். அதேபோல் தனியார் துறையினருக்கும் சம்பளத்தை அதிகரிக்க இருக்கின்றோம். அதேபோல் மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயத்தை நாங்கள் கைவிட மாட்டோம் அதனையும் நிச்சயமாக நாங்கள் பெற்றுக் கொடுப்போம்.

நாங்கள் சிறிய திருடர்களை பிடிக்க சென்ற போது பெரிய திருடர்களைக் கைது செய்திருக்கின்றோம். மோசடிகளில் ஈடுபட்ட ராஜபக்ஷகளையும் கைது செய்துள்ளோம். அதேபோல் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கையைக் கட்டாயம் நிறைவேற்றுவோம்.- என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்



**முத்துஜயன்கட்டு...**

நடைபெற்ற அடையாள அணிவகுப்பில், ஏற்கனவே கைதான மூன்று இராணுவத்தினர்களில் இருவரைச் சாட்சிகள் அடையாளம் காட்டினர் என்று தெரிய வந்தது. திருட்டு, திருட்டுக்கு உதவி செய்தல், இராணுவ முகாமுக்குள் அத்துமீறி ஆள்கள் நுழைய இடமளித்தல், ஆள்கள் மீது தாக்குதல் போன்ற குற்றச்சாட்டுக்களே இந்த வழக்கில் மேற்படி நால்வருக்கும் எதிராக இதுவரை சுமத்தப்பட்டிருந்தன.

பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், முல்லைத்தீவு சட்டத்தரணிகள் பலரும், ஒருவர் உயிரிழந்த விடயம் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினர்.

ஆயினும் அந்த மரணம் தொடர்பான விடயத்தை நீதிமன்றம் கவனத்தில் கொண்டுள்ளது என்றும், மரண விசாரணை நடைபெற்று தீர்ப்பு வந்த பின்னர் தேவையானால் அந்த விவகாரத்தை இந்த வழக்கோடு தொடர்புபடுத்தலாம் என்றும் நீதிவான் தெரிவித்தார்.

சந்தேகநபர்களுக்கு எதிராக இதுவரை கொலைக் குற்றம் சுமத்தப்படாத சூழலில் அவர்களைப் பிணையில் விடுவிக்குமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பிணை அனுமதி வழங்கப்பட வேண்டிய விடயங்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால், சந்தேகநபர்களுக்குப் பிணை அளிப்பதை ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் ஆட்சேபித்தார்.

"ஏற்கனவே இந்த விவகாரத்தில் ஒரு மரணம் இடம்பெற்றுள்ளது. மேலும் இந்த இராணுவத்தினர் விடுவிக்கப்பட்டால் அவர்கள் சாட்சிகளைக் குழப்பக் கூடிய சாத்தியங்கள் உண்டு. இந்த விவகாரம் ஏற்கனவே பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் விடயமாக மாறி இருப்பதால் இந்தச் சமயத்தில் சந்தேகநபர்களைப் பிணையில் விடுவிப்பது மேலும் குழப்பங்களை ஏற்படுத்தலாம்." – என்று ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் வாதாடினார்.

இரு தரப்பு வாதங்களையும் செவிமடுத்த நீதிவான், "இது பிணையில் விடக்கூடிய குற்றங்கள் தொடர்பான விவகாரம். ஆயினும் சில விதிவிலக்கு காரணங்களுக்காகப் பிணையை மறுக்க முடியும் ." – என்று தெரிவித்து, ஒரு நீண்ட கட்டளையைப் பதிந்து, சந்தேகநபர்களின் பாதுகாப்பையும் கவனத்தில் கொண்டு விளக்கமறியல் உத்தரவை நீடிப்பதாக அறிவித்தார்.

உயிரிழப்பு சம்பவம் தொடர்பான அறிக்கை உட்பட பல விடயங்கள் புலனாய்வு அறிக்கைகள் வர வேண்டி இருப்பதால் வழக்கை ஒரு வாரம் தள்ளி வைத்துஅதுவரைசந்தேகநபர்களைவிளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் கட்டளை பிறப்பித்தார்.

---

**தமிழ் அகதிகளை...**

இலங்கைக்கு வந்தவுடன் குடிவரவுச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் குறைந்தது நான்கு அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என வந்த தகவல்கள் காரணமாக, ஒகஸ்ட் 14, 2025 அன்று திருச்சியிலிருந்து கொழும்புக்கு ஏழு அகதிகளை திருப்பி அனுப்பும் திட்டம் கடைசி நிமிடத்தில் இரத்துச் செய்யப்பட்டது.

அதிகாரபூர்வ வட்டாரங்களின்படி, ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தூதரகத்தால் திருப்பி அனுப்பப்பட்ட ஃப்ரீமேன் ரிச்சர்ட் வேல்வவந்தரம் (வயது54), ஒகஸ்ட் 12, 2025 அன்று கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கியதும் கைது செய்யப்பட்டார். அவர் பின்னர் ஒரு நீதிவான் முன் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இருப்பினும், திருப்பி அனுப்பும் ஆவணங்களை மதிப்பாய்வு செய்ததில் அவர் திரும்பி வருவது தொடர்பான எந்த முன் பாதுகாப்பு கவலைகளும் இல்லை என்று வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோல், மே 28, 2025 அன்று, உள்நாட்டுப் போரின் போது பல தசாப்தங்களுக்கு முன்பு நாட்டை விட்டு வெளியேறிய மற்றொரு தமிழ் அகதி யாழ்ப்பாணத்தில் தரையிறங்கிய பிறகு கைது செய்யப்பட்டார்.

ஒகஸ்ட் முதல் வாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தூதரகத்தின் உதவியின்றி யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய தமிழ்த் தம்பதியினரும் கைது செய்யப்பட்டனர். இந்த ஜோடி 1996 முதல் இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள மண்டபம் அகதிகள் முகாமில் வசித்து வந்ததாகக் கூறப்படுகின்றது. வந்தவுடன், அவர்கள் குடிவரவு அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டு, மேலதிக விசாரணைக்காகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தாமாக முன்வந்து நாடு திரும்பும் அகதிகளைச் செல்லுபடியாகும் பாஸ்போர்ட் அல்லது பயண ஆவணங்கள் இல்லாமல் நாட்டை விட்டு வெளியேறிய குற்றச்சாட்டின் பேரில் இலங்கை அதிகாரிகள் கைது செய்வது இதுவே முதல் முறை.

"தாமாக முன்வந்து நாடு திரும்பும் அகதிகளின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை உறுதி செய்வதே அடிப்படைக் கொள்கை. ஒரு குற்றவியல் வழக்கு நிலுவையில் இல்லாவிட்டால் கைதுகள் செய்யப்படாது. இன மோதலில் தங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற அச்சத்தில் அகதிகள் நாட்டை விட்டு வெளியேறியமையால் குடியேற்றச் சட்டங்களை மீறுவது மன்னிக்கப்படுகின்றது." என்று திருப்பி அனுப்பும் பணியில் ஈடுபட்ட ஒரு மூத்த இந்திய அதிகாரி தெரிவித்தார்.

மேற்கோள் காட்ட விரும்பாத அதிகாரி, இந்தப் பிரச்சினை இராஜதந்திர வழிகளில் எடுத்துக் கொள்ளப்படுவதாகக் கூறினார்.

அகதிகள் குடியேற்ற விதிகளை மீறியமைக்காகக் கைது செய்யப்படமாட்டார்கள் என்றும், அவர்கள் கண்ணியத்துடன் நடத்தப்படுவார்கள் என்றும், இலங்கை அதிகாரிகளிடமிருந்து உத்தரவாதம் கிடைக்கும் வரை, நாடு திரும்பும் செயல்முறை நிறுத்தி வைக்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

---

**தென்னிலங்கையில்...**

மாவத்தைப் பகுதியில் இன்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஞானரத்ன மாவத்தைப் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவரால் இந்தத் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் பேலியகொடை மீன் சந்தையில் பணிபுரியும் 45 வயதுடைய நபர் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பேலியகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாவகச்சேரி நகர சபை மாதாந்தக் கூட்டத்தில் ஊடகவியலாளரை வெளியேற்றிய நகரபிதா



**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ். சாவகச்சேரி நகர சபை மாதாந்தக் கூட்டத்தில் இருந்து ஊடகவியலாளர் ஒருவர், நகர பிதாவின் பணிப்பின் பேரில் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்.

நகர சபையின் மாதாந்தக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நகர பிதா வடிவேலு சிறிபிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.

அதன்போது, கடந்த கூட்டறிக்கையில் பல விடயங்கள் விடுபட்டுள்ளன எனவும், யார் யார் என்ன கருத்துக் கூறினார்கள் என்ற விடயம் குறிப்பிடப்படவில்லை எனவும் உப நகர பிதா ஞா.கிசோர் கடந்த கூட்டறிக்கை வாசித்த போது தனது எதிர்ப்பை வெளியிட்டார்.

அதன்போது உப நகர பிதாவின் உரையை இடைநிறுத்திய நகர பிதா, அங்கிருந்த ஊடகவியலாளரை வெளியேற்றுமாறு நகர சபை உத்தியோகத்தர்களுக்குப் பணித்தார்.

அதனையடுத்து கூட்டத்தில் இருந்த ஊடகவியலாளர், தன்னை ஊடகவியலாளர் என அடையாளப்படுத்திய போதிலும், சபை அமர்வுகளில் கலந்து கொள்ள அனுமதியில்லை எனக் கூறி வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்.

உள்ளூராட்சி சபைகளின் மாதாந்தக் கூட்டங்களில் ஊடகங்கள் கலந்து கொள்வதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய சபைகள் அனுமதி வழங்கியுள்ள நிலையில் சாவகச்சேரி நகர சபையில் மாத்திரம் ஊடகங்களுக்கு அனுமதியில்லை என ஊடகவியலாளரை அங்கிருந்து நகர பிதா வெளியேற்றிய சம்பவம் சக ஊடகவியலாளர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

சாவகச்சேரி நகர சபை நகர பிதா தெரிவின்போது, ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில், சபையில் நடைபெறும் விடயங்கள் மக்கள் மத்தியில் சென்றடைவதைத் தடுக்கும் முகமாகவே ஊடகவியலாளரைச் சபையில் இருந்து வெளியேற்றியுள்ளதாகவும் , குறிப்பாகக் கடந்த கூட்டறிக்கையில் உள்ள குறைபாடுகளை உப நகர பிதா சுட்டிக்காட்டி உரையாற்றும்போது ஊடகவியலாளரை அங்கிருந்து அப்புறப்படுத்தியமை நகர பிதா தனது தவறுகளை வெளியில் தெரியாமல் தடுக்கவே எனவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

# கொடிகாமத்தில் வெடிக்காத நிலையில் பெருமளவான துப்பாக்கி ரவைகள் மீட்பு!





**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ். கொடிகாமம் பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமை நீர் குழாய்களை மண்ணில் புதைக்கும் பணிகளுக்காக நிலத்தை அகழ்ந்தபோது வெடிக்காத நிலையில் ஒரு தொகை துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

குழாய்களைப் புதைப்பதற்காக நிலத்தை அகழ்ந்து போது சந்தேகத்துக்கிடமான முறையில் உரைப் பை ஒன்று காணப்பட்டதையடுத்து, கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

அதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அந்த உரைப் பையை மீட்டு சோதனையிட்ட போது அவற்றுக்குள் வெடிக்காத நிலையில் துப்பாக்கி ரவைக் கோர்வைகள் காணப்பட்டன.

அவற்றை மீட்டு கொடிகாமம் பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்ற பொலிஸார், அவற்றுள் 1393 துப்பாக்கி ரவைகள் காணப்படுகின்றன எனவும், அவற்றை நீதிமன்றத்தில் பாரப்படுத்தி நீதிமன்ற உத்தரவில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் தெரிவித்தனர்.

# தேசிய லொத்தர் சபையின் முன்னாள் தலைவர் கைது!

## ஒகஸ்ட் 28 ஆம் திகதி வரை விளக்கமறியல்



தேசிய லொத்தர் சபையின் முன்னாள் தலைவர் துசித ஹல்லொலுவ இன்று கைது செய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளார்.

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் தலைவர் துசித ஹல்லொலுவ, அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தார்.

2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் தேசிய லொத்தர் சபைக்குச் சொந்தமான 4 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய மடிக்கணினி, கையடக்கத் தொலைபேசி போன்ற பொருட்களை முறைகேடாகப் பயன்படுத்தியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டின் பேரில், கடந்த மே மாதம் 30 ஆம் திகதி கைது செய்யப்பட்ட துசித ஹல்லொலுவ, கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். நீதிமன்றம் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

எனினும், கடந்த ஜுன் மாதம் 20 ஆம் திகதி அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவருக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகள் விதிக்கப்பட்டதுடன், வெளிநாட்டு பயணத் தடையும் விதிக்கப்பட்டது.

இதற்கிடையில், அண்மையில் அவர் பயணித்த வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவமும் பதிவாகியிருந்தது. இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக, கொழும்பு குற்றப் பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில், சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், தேசிய லொத்தர் சபையின் முன்னாள் தலைவர் துசித ஹல்லொலுவவை கைது செய்யுமாறு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதையடுத்து அவர் இன்று காலை கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# சஷீந்திரவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல – கிரிப்பன் வேவ பகுதியில் உள்ள அரச நிலத்துக்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்ற சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ நுகேகொடை பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் ஒகஸ்ட் 6 ஆம் திகதி காலை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சஷீந்திர ராஜபக்ஷ கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிங்களம் திருந்தாது!

தேசிய இனப் பிரச்சினைக்கு இணக்கத் தீர்வு காண்பது உட்பட பல்வேறு சிக்கல்களுக்கு முடிவு காண்பதற்கு அவ்வப்போது எடுக்கப்பட்ட முயற்சிகளை எல்லாம் இலங்கை அரசு குழப்பி அடிப்பதற்கு முக்கிய காரணமாகக் காட்டியது இலங்கையின் 'கெட்டழிந்து போன' சட்டங்களைத்தான்.

இரும்புச் சட்டகம் போல, வாழ்வியல் முறைமைகளுக்கு ஏற்ப வளைந்து கொடுக்காமல், நோக்கு இலக்கு இன்றி வரையப்பட்ட இலங்கையின் சட்டங்கள், தீர்வுக்கான பல முயற்சிகளில் இடைஞ்சலாகவும் நெருடலாகவும் இருந்து வந்தமை கண்கூடு.

இப்போது யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கழிந்த பின்னரும் யுத்தத்தினால் இடம் பெயர்ந்த அகதிகள் நாடு திரும்புவதற்கு அதே முரட்டுப் போக்குள்ள சட்டங்கள் தடையாகவும் இடைஞ்சலாகவும் இருக்கின்றன. அவற்றை ஒழுங்கு முறைப்படுத்தி திருத்தவோ, நடைமுறைப்படுத்தவோ பேரினவாத அரசுகளுக்கு ஈடுபாடும் இல்லை, விருப்பமும் இல்லை.

'செத்துப்போன' சட்டங்களைத் தூக்கிப்பிடித்து, நடைமுறைப்படுத்த முயலும் சிங்களத்தின் போக்கினால் அகதிகளை மீளத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையை ஐ.நா. அகதிகளுக்கான தூதரகம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் எல்லா விடயங்களையும் கவனித்து நாடு திரும்புவது பாதுகாப்பானது எனத் திருப்பி அனுப்பி வைத்த அகதிகளை, விமான நிலையத்தில் வைத்து கைது செய்து, அழைத்துச் செல்லும் பேரினவாதத்தின் முரட்டுத்தனமான சட்டம் மற்றும் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகள் காரணமாக ஐ.நா. தூதரகம் இவ்வாறு முடிவு எடுத்திருக்கிறது.

தமது சட்டத்தை கண்மூடித்தனமாக அமுல் நடத்தும் அதிகாரிகளின் எதேச்சாதிகாரத்தை கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்த வக்கற்ற - திராணியற்ற - அரசியல் தலைமைகளின் போக்குக் காரணமாக அதிருப்தி அடைந்துள்ள ஐ.நா. அகதிகள் தூதரகம் கடந்த 14ஆம் திகதி திருச்சியில் இருந்து ஏழு அகதிகளை கொழும்புக்கு திருப்பி அனுப்பும் தனது நடவடிக்கையைக் கடைசி நேரத்தில் ரத்து செய்து இருக்கிறது.

அகதி ஒருவர் தன்னார்வமாக நாடு திரும்புவதில் பாதுகாப்புக் கவலைகள் ஏதுமில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட ஒரு 54 வயது நபரை இலங்கையின் சட்டக் கட்டமைப்பு விமான நிலையத்தில் வைத்து வேண்டுமென்றே கைது செய்து இன்னல் படுத்தியிருக்கிறது. அதேபோல மே 28ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தமிழ் அகதி ஒருவர் வந்திறங்கிய போது கைது செய்யப்பட்டார்.

இப்படி ஐ.நா. அகதிகள் தூதரக ஏற்பாட்டில் முழு 'கிளியரன்ஸ்' எடுத்து நாடு திரும்பிய அகதிகளை விமான நிலையங்களில் வைத்து அல்லல்படுத்தும் - இடைஞ்சல் படுத்தும் - பேரினவாத அதிகார வர்க்கத்தை ஒழுங்குபடுத்த முடியாத நிலையில் கொழும்பு அரசுத் திறனற்றிருக்கின்றது.

“தாமாக முன்வந்து நாடு திரும்பும் அகதிகளின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை உறுதி செய்வதே அடிப்படைக் கொள்கை. ஒரு குற்றவியல் வழக்கு நிலுவையில் இல்லாவிட்டால் கைதுகள் செய்யப்படாது. இன மோதலில் தங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற அச்சத்தில் அகதிகள் நாட்டை விட்டு வெளியேறியமையால் குடியேற்றச் சட்டங்களை மீறுவது மன்னிக்கப்படுகிறது.”- என்று திருப்பி அனுப்பும் பணியில் ஈடுபட்ட ஒரு மூத்த இந்திய அதிகாரி தெரிவித்தார். ஆனால் இலங்கையின் 'மிதப்பு எண்ணம் கொண்ட' சிங்கள அதிகார வர்க்கத்துக்கு இந்த நியாயம் புரிவதில்லை.

“நாடு திரும்பும் அகதிகள் குடியேற்ற விதிகளை மீறியமை என்ற பெயரில் கைது செய்யப்பட மாட்டார்கள் என்றும், கண்ணியத்துடன் நடத்தப்படுவார்கள் என்றும் இலங்கை அதிகாரிகளிடமிருந்து உத்தரவாதம் கிடைக்கும் வரை, நாடு திரும்பும் செயல்முறை நிறுத்தி வைக்கப்படும்” என்று ஐ.நா. தரப்பில் கூறப்படுகின்றது. ஆயினும் மமதை எண்ணம் கொண்ட சிங்கள அதிகார வர்க்கம் திருந்தும் என்று நம்புவதற்கு இடமில்லை.

# திருமலை உப்புவெளிக் கடற்கரையில் கடற்கரைப் பூங்கா அமைக்க அடிக்கல்



திருகோணமலை உப்புவெளி கடற்கரையில், இன்று (19) கடற்கரைப் பூங்கா அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது.

'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் கீழ், திருகோணமலை மாவட்டத்தில் 10 புதிய சிறு கடற்கரை பூங்காக்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி மாலையில் மக்கள் சென்று ஓய்வெடுக்கக் கூடிய மேலும் 10 கடற்கரை பூங்காக்கள் உருவாக்கப்படவுள்ளன. இதன்படி இன்று முதலாவது பூங்காவுக்கான கட்டுமானப் பணிகள் உப்புவெளி கடற்கரையில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா அடிக்கல்லை நட்டு கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன மற்றும் அரச அலுவலர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.



# வடிகால் அமைப்புகளை முறையாக அமைக்குக!





(மஸ்கெலியா)

ஹட்டன் நகர சபை பகுதியில் உள்ள அனைத்து வடிகால்களையும் தற்போது விரிவாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக பிரதான வீதியில் இருந்து டிக்கோயா சாலையில் உள்ள வீதியில் உள்ள வடிகால் அதிக மழை பெய்யும் பட்சத்தில் கழிவு நீர் நிரம்பி வீதியில் செல்கிறது. இதனால் பயணிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட ஹட்டன் நகர சபை முன் வந்து ஹட்டன் நகரில் உள்ள அனைத்து வடிகால்களையும் தற்போதைய காலத்துக்கு ஏற்ப ஆழப் படுத்தி வடிகால்களில் கழிவு நீர் செல்ல வழி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர்.

# விசுவமடு பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அரிசி ஆலைக்கு வர்த்தக அமைச்சர் விஜயம்



(த.சுபேசன்)

வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் இயங்காத சொத்துக்களை மீள இயங்கி வைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, பத்து ஆண்டுகளாக பயன்பாட்டின்றி இருந்த விசுவமடு பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் அரிசி ஆலையின் தற்போதைய செயல் திறனை நேரில் பார்வையிடும் நோக்கில், வர்த்தக வாணிப உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சர் வசந்த சமரசிங்க களவிஜயம் மேற் கொண்டார்.

இந்த நிகழ்வில், அமைச்சின் பிரதி யமைச்சர் ஆர். எச். உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்கும ரன், வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர், வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர், பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள், விவசாய உற்பத்தி கூட்டுச்சங்கங்களின் பிரதி நிதிகள் மற்றும் வங்கியின் பணியா ளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் அமைச்சர் வசந்த சமரசிங்க கருத்துத் தெரிவிக்கையில், எமது அரசு கூட்டுறவுத் துறையை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல உறுதியாக செயற்பட்டு வருகின்றது. அதன் அடுத்த கட்டமாக ஆயிரம் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றோம். அதற்கு வலுசேர்க்கும் வகையில், வடக்கு கூட்டுறவு அபி விருத்தி வங்கியின் இயங்காத சொத் துக்களை மீள இயக்கும் திட்டத்தின் கீழ், இந்த நவீன அரிசி ஆலையை செயல்படுத்தியிருப்பது பாராட்டத்தக்க செயலாகும்.

இந்த ஆலையை முழுமையாக இயங்கச் செய்யும் வாய்ப்பு ஏற்படும் பட்சத்தில், முல்லைத்தீவு மாவட்டத் தில் உள்ள விசுவமடு பிரதேச விவசாயி களிடம் இருந்து நெல்லை நியாய விலை யில் கொள்வனவு செய்து, அதனை அந்தப் பிரதேச மக்களுக்கே நியாய மான விலையில் அரசியாக விற் பனை செய்ய முடியும்.

வடக்கு மாகாணத்தில் இயங்காத நிலையில் உள்ள தொழிற்சாலைகளை மீள செயல்படுத்தும் நோக்கில், வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் சொத் துக்களை மீள இயக்கும் திட்டத்துக்கு வர்த்தக வாணிப உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சு தொடர்ந்து முழுமையான ஆதரவை வழங்கும்.- என்றார்.

# பிரதேச செயலாளராகப் பதவி உயர்வு பெற்ற பார்த்திபனுக்கு காரைதீவில் பாராட்டு நிகழ்வு!





**(வி.ரி.சகாதேவராஜா)**

காரைதீவு உதவி பிரதேச செயலாளராக இருந்து, தெஹியத்தகண்டிய பிரதேச செயலாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் எஸ். பார்த்திபனுக்கு, சேவைநலன் பாராட்டு நிகழ்வு, ஊர் மக்கள் சார்பில் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் பொறியியலாளர் ஜி. அருணன் தலைமையில் காரைதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்த ஊர் சார்பிலான நிகழ்வை, காரைதீவு அறங்காவலர் ஒன்றியமும் , சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன .

பிரதேச செயலாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் பார்த்திபனின் அர்ப்பணிப்பான சேவைகள் தொடர்பாக, அறங்காவலர் ஒன்றியத் தலைவர் இரா.குணசிங்கம் , செயலாளர் சி.நந்தேஸ்வரன், சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்ற ஆலோசகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா, செயலாளர் கு.ஜெயராஜி, உப தலைவர் எஸ். சிவராஜா ஆகியோர் சிறப்புரையாற்றினர். பிரதேச செயலாளர் ஜி.அருணனும் வாழ்த்துரை வழங்கினார்.

நிறைவில் பார்த்திபன் பொன்னாடைகள் போர்த்தப்பட்டு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு பாராட்டப்பட்டார். சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவப் படம் பொறித்த படம் அங்கு நினைவு பரிசாக வழங்கப்பட்டது.






# காரைதீவில் விழாக்கோலம் பூண்டது விபுலானந்தா பவளவிழா நடைபவனி!

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் பவளவிழா நடைபவனி சனிக்கிழமை வெகு விமரிசையாக நடைபெற்றது.

அதனையொட்டி முழுக் காரைதீவுக் கிராமமுமே விழாக் கோலம் பூண்டது. அதிரும் இசை ஒலிகளால் காரைதீவு அதிர்ந்தது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த மாபெரும் பவளவிழா நடைபவனியில் 43 வருட மாணவர் அணியினர் அலங்கரிக்கப்பட்ட வாகனங்கள் சகிதம் தனித்துவமான சீருடையுடன் கலந்து கொண்டனர்.

“விபுலத்தால் ஒன்றிணைந்துயர்வோம்” என்ற மகுடத்தின் கீழ் நடைபெற்ற இந்த நடை பவனிக்கு, பிரதம அதிதியாகக் கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரும் பழைய மாணவருமான எஸ். புவனேந்திரன் கலந்து கொண்டார்.

சங்கத்தின் தலைவரும், கல்லூரி அதிபருமான ம.சுந்தரராஜன் தலைமையில் பழைய மாணவர் சங்கத்தின் ஆலோசகரும், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜாவின் ஆலோசனையில் நடைபெற்ற இந்நிகழ்வில், முன்னதாக கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வரணியா சாந்தரூபன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சஞ்சீவன், முன்னாள் அதிபர் பேராசிரியர் சி.அருள்மொழி ஆகியோர் தேசிய, வலய, கோட்ட, பாடசாலை, பவளவிழா கொடிகளை ஏற்றி வைத்தனர்.

கல்லூரியில் பயின்று உயர் நிலையில் இருக்கும் பேராளர்கள் மற்றும் மாணவர்கள் ஆசிரியர்கள் முன்னாள் அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் நட்சத்திர அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

விபுலானந்தா மத்திய கல்லூரியின் மைதானத்தில் இருந்து ஆரம்பமாகிய நடைபவனி காரைதீவுக்குள் மட்டுப்படுத்தப்பட்டு பிற்பகல் ஒரு மணியளவில் நிறைவடைந்தது.

சிறந்த முதல் மூன்று அணிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.







# மன்னாரில் காற்றாலை, கனிய மணல் அகழ்வுக்கு எதிராக 17ஆவது நாளாகத் தொடரும் போராட்டம்!

## பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள், மீனவர்கள் பங்கேற்பு தீர்வு வழங்காவிட்டால் போராட்டம் தொடரும் எனவும் எச்சரிக்கை

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனவீர்ப்பு போராட்டம் இன்று செவ்வாய்க்கிழமை (19) 17 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் குறித்த போராட்டத்தில் பல்வேறு கிராமங்களை சேர்ந்த மக்கள் மற்றும் மீனவர்கள் கலந்து கொண்டு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வரும் போராட்டத்துக்கு இன்று ஆதரவு வழங்கும் வகையில் பனங்கட்டிக்கொட்டு, ஜிம் பிரவுன் நகர், எமில் நகர், இத்திக்கண்டல், தலைமன்னார் கிராமம் ஆகிய கிராம மக்களும் மீனவர்களும் கலந்து கொண்டு ஆதரவு வழங்கியுள்ளனர்.

போராட்டமானது மன்னார் நகர சுற்றுவட்டப் பகுதியில் இடம் பெற்று வருகிறது. போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்தல் ஆகியவை முழுமையாக நிறுத்தப்படும்வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி ஒரு மாத கால அவகாசம் கோரியுள்ள நிலையில் மக்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன் வைத்துள்ளனர். ஜனாதிபதி உரிய தீர்வை வழங்காது விட்டால் போராட்டம் தொடரும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் எச்சரித்துள்ளனர்.







# வடமராட்சி மாணவருக்கு தலைமைத்துவப் பயிற்சி!








'தலைமைத்துவ பயிற்சியில் பல மாணவர்கள் தன்னார்வமாக முன்வந்து கருத்துக் கூறியதை அவதானித்து, தன்னம்பிக்கை பெற்று, நானும் குழு செயல்பாடுகள் மூலம் எனது தலைமைத்துவத்தை வெளிப்படுத்தினேன். எதிர்வரும் காலங்களிலும் எனது தலைமைத்துவத்தை கல்வியிலும், வாழ்க்கையிலும் சிறப்பாக வெளிபடுத்துவேன் என்ற நம்பிக்கை என்னில் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நெல்லியடி மத்திய கல்லூரியில் தரம் 9 இல் கல்வி கற்கும் இலட்சிகன் என்னும் மாணவன் தெரிவித்தார்.

Visions Global Empowerment, Sri Lanka Ratnam Foundation ஆகிய நிறுவனங்கள் இணைந்து வடமராட்சி வலயத்துக்கு உட்பட்ட கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை, இமையாணன் அ.த.க. பாடசாலை, கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை, உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மற்றும் நெல்லியடி மத்திய கல்லூரி ஆகிய ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 6 முதல் 9 வரை கல்வி பயிலும் 42 மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சியினை நடத்தின.

இதில் பயிற்சி பெற்ற மாணவனே இவ்வாறு தெரிவித்தார்.

வடமராட்சி வலயக் கல்விப் பணிமனையில் கடந்த 11 முதல் 15ஆம் திகதி வரை நடத்தப்பட்ட இந்த தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறையில் மாணவர்கள் தலைமைத்துவம் சார்ந்த பங்கேற்றல் முறை செயற்பாடுகளில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

மாணவர்களின் சுய விழிப்புணர்வு, தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பல், தலைமைத்துவம், குழுசெயல்பாடு, தொடர்பாடல், திட்டமிடல், நேர முகாமைத்துவம் மற்றும் முன்வைப்பு திறன் சார்ந்த திறன் விருத்திக்கும், தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வாழ்க்கை தொடர்பான ஊக்குவிப்பிற்க்கும் இந்தப் பயிற்சி ஒரு வாய்ப்பாக அமைந்தது எனலாம்.

இந்த பயிற்சிப் பட்டறையில் சிறந்த முறையில் மாணவர்கள் தங்களது தலைமைத்துவம் சார்ந்த துலங்கல்களை வெளிப்படுத்தியிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக, பயிலுனர்கள் நாளாந்த செயற்பாடுகளைத் திட்டமிட்டு, ஒழுங்கமைத்து செயற்படுகின்ற வழிப்படுத்தலை பெற்றுக் கொண்டனர்.

இந்தப் பயிற்சியில் ஒவ்வொரு மாணவரும் தமக்கான சுயவிருத்தி திட்டம் ஒன்றை வடிவமைத்தமை இப்பயிற்சி நெறியின் சிறப்பை மேம்படுத்தியது.

வடமராட்சி வலயத்தின் ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்புடன், விஷன்ஸ் பயிற்றுனர் குழாம் வழி நடத்திய இந்தப் பயிற்சி தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வாழ்க்கை ஊக்குவிப்பை வழங்கிய ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்தது .

# மாணாக்க உழவர்-2025 வீட்டுத் தோட்ட போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரல்!

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டு தோறும் மாணவர்களிடையே நடத்திவரும் மாணாக்க உழவர் வீட்டுத் தோட்டப் போட்டி இந்த ஆண்டும் நடைபெறவுள்ளது. அதற்கான விண்ணப்பங்கள் இப்போது கோரப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில்,

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களிடையே வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக மாணாக்க உழவர் என்னும் வீட்டுத் தோட்டப் போட்டியை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பற்றாக்குறை, நஞ்சற்ற உணவு உற்பத்தி, மாணவர்களை மன அழுத்தங்களில் இருந்து விடுவித்தல் ஆகியவனவற்றை நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுவரும் இப்போட்டியின் இந்த ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஏற்கனவே வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டுள்ள மாணவர்களும், புதிதாக ஈடுபட விரும்பும் மாணவர்களும் இந்த ஆண்டுக்கு உரிய மாணாக்க உழவர் போட்டியில் கலந்துகொள்ள முடியும்.


போட்டியில் பங்கேற்கும் மாணவர்களுக்கான செயன்முறை வழிகாட்டல் கருத்தமர்வும் விதைப்பொதிகள் விநியோகமும் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குப் பருத்தித்துறை வீதியில், நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியில் பிரதி விவசாயப் பணிப்பாளர் கிருபவதனி சிவதீபன், இயற்கை விவசாயச் செயற்பாட்டாளர் காரை சி. நிரோசன் ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு முன்பாக 0777969644 அல்லது 0741471759 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு பெயர்களைப் பதிவு செய்பவர்கள் மாத்திரமே 24ஆம் திகதி நடைபெறவுள்ள செயன்முறை வழிகாட்டல் கருத்தமர்வில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

போட்டியில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்கும் மாணாக்க உழவர் சான்றிதழ்களும் சிறப்பாக வீட்டுத் தோட்டச் செய்கையை மேற்கொள்பவர்களுக்குச் சிறப்புப் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# காவிரி ஆற்றிலிருந்து தமிழகத்துக்கு 1.20 லட்சம் கன அடி தண்ணீர் திறப்பு

கர்நாடகாவில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான தலக்காவிரி, பாகமண்டலா, மடிகேரி, மைசூரு உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. நேற்று வீராஜ்பேட்டை, மடிகேரி ஆகிய இடங்களில் 148 மில்லி மீற்றர் மழை கொட்டி தீர்த்தது.

இதனால், காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் மண்டியா மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணராஜ சாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

மண்டியா மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணராஜசாகர் அணைக்கு நேற்று மாலை 7 மணி நிலவரப்படி வினாடிக்கு 1 லட்சம் கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. இதனால் அணையின் நீர்மட்டம் 124.40 அடியாக உயர்ந்துள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 1 லட்சம் கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

கேரள மாநிலம் வயநாட்டில் கனமழை பெய்துவருவதால் கபிலா ஆற்றிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் மைசூருவில் உள்ள கபினி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணைக்கு வினாடிக்கு 22 ஆயிரத்து 142 கன அடி நீர் வந்துகொண்டிருக்கும் நிலையில், 20 ஆயிரம் கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதன் மூலம் தமிழகத்துக்கு வினாடிக்கு 1.20 லட்சம் கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. காவிரி ஆற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது. மைசூரு, மண்டியா, ராம்நகர் ஆகிய மாவட்டங்களில் காவிரி கரையோர கிராமங்களில் வாழும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# மத்திய அமைச்சர் ஜெய்சங்கருடன் சீன வெளியுறவு அமைச்சர் சந்திப்பு

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி நேற்று இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். டில்லியில் நேற்று மாலை மத்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து வாங் யி பேசியுள்ளார்.

இதன்போது,இந்தியாவும் சீனாவும் உறவுகளில் கடினமான காலத்திற்கு பிறகு முன்னேற வேண்டும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வேறுபாடுகள் சர்ச்சைகளாகவோ போட்டி மோதல்களாகவோ மாறக்கூடாது என குறிப்பிட்ட அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், உலகளாவிய பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான ஒத்துழைப்புக்கும் அழைப்பு விடுத்தார்.

இருதரப்பு உறவுகளில் ஒரு கடினமான கட்டத்துக்குப் பின்னர் பதற்றங்களைத் தணிப்பதற்கான ஒரு படியாக பரவலாகக் கருதப்படும் இந்தச் சந்திப்பு, பேச்சுவார்த்தை மற்றும் ஒத்



துழைப்பின் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது.

எல்லை ஸ்திரத்தன்மை, வர்த்தகம் மற்றும் பிராந்திய பாதுகாப்பு குறித்து இரு தரப்பினரும் தொடர்ந்து கலந்துரையாடுவர்எனஎதிர்பார்க்கப்படுகிறது

இந்த சந்திப்புக்குப் பின்னர் இருவரும் கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

“இரு நாடுகளுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் சர்ச்சைகளாக மாறக்கூடாது. அனைத்து வடிவங்களிலும் வரும் தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவது என்பது இரு நாடுகளின் முக்கிய முன்னுரிமையாகும். எங்களின் பேச்சுவார்த்தை மூலம் இரு நாடுகளிடையே நிலையான கூட்டுறவும்,” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று காலை 11 மணிக்கு, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலை வாங் யி சந்திக்கிறார். மாலை 5.30 மணியளவில் பிரதமர் மோடியை அவரது இல்லத்தில் சீன அமைச்சர் வாங் யி சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளார்.

சீனாவின் தியான்ஜின் நகரில் எதிர்வரும் 31, செப்டம்பர் 1 ஆகிய திகதிகளில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வருடாந்திர உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்க பிரதமர் மோடி சீனா செல்வார் என எதிர்பார்க்கப்படும் நிலையில், மோடி-வாங் யி சந்திப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# ராதாகிருஷ்ணன் வெற்றிக்காக ஸ்டாலினிடம் ஆதரவு கோரல்

## ராஜ்நாத் சிங் தொலைபேசியில் வேண்டுகோள்

குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு ஆதரவு அளிக்குமாறு முதல்வர் ஸ்டாலினிடம் மத்திய அமைச்சர்ராஜ்நாத் சிங் தொலைபேசியில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குடியரசு துணைத் தலைவரை மக்களவை, மாநிலங்களவை எம்.பிக்கள் இணைந்து தேர்வு செய்வார்கள். மக்களவையில் தற்போது 542 எம்.பிக்கள் உள்ளனர். ஒரு இடம் வெற்றிடமாக உள்ளது. அதேபோல, மாநிலங்களவையில் 239 எம்.பிக்கள் உள்ளனர். அங்கு 6 இடங்கள் வெற்றிடமாக உள்ளன.

இந்நிலையில், மக்களவை, மாநிலங்களவையில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பெரும்பான்மை உள்ளது. இதனால், இந்த கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளருக்கே வெற்றி என்பது உறுதியாகியுள்ளது.

இந்த சூழலில்தான், டில்லியில் தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆட்சிமன்றக் குழு கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. பிரதமர் மோடியின் இல்லத்தில் அவரது தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், பா.ஜ.க. தேசிய தலைவர் ஜே.பி.நட்டா. மத்திய அமைச்சர்கள்



அமித் ஷா, ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதை தொடர்ந்து, குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக தற்போது மகாராஷ்டிரா ஆளுநராக உள்ள தமிழகத்தை சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணன் போட்டியிடுவார் என்று பா.ஜ.க. தேசிய தலைவர் ஜே.பி.நட்டா அறிவித்தார்.

இந்நிலையில், பிரதமர் மோடியை சி.பி.ராதாகிருஷ்ணன் நேற்று சந்தித்து வாழ்த்து பெற்றார். கூட்டணி கட்சிகளின் தலைவர்களும் அவருக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இதற்கிடையே, சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு ஆதரவு கேட்டு, தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் மட்டுமின்றி, பா.ஜ.க. கூட்டணியில் உள்ள அ.தி.மு.க, த.மா.கா. உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்களும் மற்ற கட்சிகளின் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், குடியரசு துணைத் தலைவராக ஒருமித்த கருத்துடன் சி.பி.ராதாகிருஷ்ணன் தேர்வு செய்யப்பட வேண்டும் என்பதில் பா.ஜ.க. தலைமை முனைப்புடன் உள்ளது. இதற்காக, இண்டியா கூட்டணியில் உள்ள காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று தொலைபேசியில் அழைத்து ஆதரவு கோரியுள்ளார். இதன் தொடர்ச்சியாக, இண்டியா கூட்டணியில் உள்ள பல்வேறு மாநிலங்களின் முதல்வர்களையும் தொலைபேசியில் அழைத்து அவர் ஆதரவு கோரி வருகிறார்.

அந்த வகையில், இண்டியா கூட்டணியின் முன்னணி தலைவர்களில் ஒருவரான தமிழக முதல்வர் ஸ்டாலினை ராஜ்நாத் சிங் நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். அப்போது, குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் தமிழகத்தை சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணனை ஆதரிக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார் என கூறப்படுகிறது.

தி.மு.கவுடன் கூட்டணியில் உள்ள பல்வேறு கட்சிகளின் தலைவர்களுடனும் அவர் தொலைபேசியில் உரையாடி, ஆதரவு கேட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. ஒடிசா முன்னாள் முதல்வர் நவீன் பட்நாயக் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் முக்கிய தலைவர்களுடனும் ராஜ்நாத் சிங் பேசி, ஆதரவு திரட்டி வருகிறார்.



# ஆரோக்கியமாக முடிவடைந்த ட்ரம்ப் - ஜெலன்ஸ்கி சந்திப்பு

பாதுகாப்பு உத்தரவாதங்கள் உட்பட முக்கியமான விடயங்கள் தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புடன் இடம்பெற்ற சந்திப்பு ஆரோக்கியமாக அமைந்ததாக உக்ரைனின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

அத்துடன், ரஷ்ய ஜனாதிபதி புடினை இருதரப்பு ரீதியாகச் சந்திக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

வெள்ளை மாளிகையில் டொனால்ட் ட்ரம்ப்புடன் ஜெலன்ஸ்கி மற்றும் ஐரோப்பிய தலைவர்கள் உக்ரைன் போர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தநிலையில் உக்ரைன் ஜனாதிபதியின் வருகையின் போது தாம் ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் தொலைபேசியில் கலந்துரையாடலை நடத்தியதாகக் கூறியுள்ளார்.

அவருக்கும் உக்ரைன் ஜனாதிபதிக்கும் இடையில் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யும் முகமாக இந்த தொலைபேசி கலந்துரையாடல் அமைந்ததாக ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்ய கிரெம்ளினின் கூற்றுப்படி, இந்த அழைப்பு 40 நிமிடங்கள் நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உக்ரைனுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்கள் ஐரோப்பிய நாடுகளால் அமெரிக்காவின் ஒருங்கிணைப்புடன் வழங்கப்படும் என்று ட்ரம்ப் உறுதியளித்துள்ளார்.

இதற்கிடையில் மோதலை முடிவுக்குக் கொண்டுவரப் பேச்சுவார்த்தை நடத்தப் போர் நிறுத்தம் தேவையில்லை என்று ட்ரம்ப் கூறியுள்ளார்.

எனினும், பிரான்சின் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனும் ஜெர்மன் ஜனாதிபதி பிரீட்ரிக் மெர்ஸும் போர் நிறுத்தத்தை கோரியுள்ளனர்.

அதேநேரம் இரண்டு நாடுகளுக்கும் இடையில் சமதானத்துக்காக, உக்ரைனின் டான்பாஸின் பகுதிகளை கியேவ் விட்டுக்கொடுக்க வேண்டும் என்ற ரஷ்யக் கோரிக்கை, ஒரு கண்ணோட்டத்தில் செல்வதானால், அமெரிக்கா, புளோரிடாவை விட்டுக் கொடுக்க வேண்டியதற்குச் சமமாகும் என்று ஜேர்மனிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



# பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு முன்னர் ரஷ்யா 1,000 உக்ரைன் கைதிகளை விடுவிக்கும்

ரஷ்ய மற்றும் உக்ரைன் ஜனாதிபதிகள் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக்கொண்டுள்ளதாக ஜேர்மன் பிரதமர் பிரீட்ரிக் மெர்ஸும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கும் ரஷ்ய ஜனாதிபதிக்கும் இடையே நடந்த தொலைபேசி அழைப்பிற்குப் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அமைதிப் பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு முன்னர் ரஷ்யா 1,000 உக்ரைன் கைதிகளை விடுவிக்கும் என்று எதிர்பார்ப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கையை அமைதிக்கான விருப்பத்தின் நிரூபணமாக அவர் வரையறுத்துள்ளார்.



# நைஜீரியாவில் இடம்பெற்ற படகு விபத்தில் பலர் மாயம்

நைஜீரியாவின் சோகோட்டோ மாநிலத்தில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 40 பேர் காணாமல் போயுள்ளனர்.

மேற்படி பகுதியிலுள்ள பிரபலமான சந்தைக்குப் பயணிகளை ஏற்றிச் சென்ற படகொன்றே விபத்துக்குள்ளாகியுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விபத்து இடம்பெற்ற போது அந்தப் படகில் 50 பேர் பயணித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் 10 பேர் மீட்கப்பட்டுள்ளதுடன், காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முன்னதாக நைஜீரியாவின் நைஜர் மாநிலத்தில் கடந்த வாரம் 100 பேர் பயணித்த படகொன்று விபத்துக்குள்ளானதில் 13 பேர் வரை உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.








கனடா முரசு
செவ்வாய்க்கிழமை | 19/08/2025

சமூக ஊடகப் பதிவினால் சர்ச்சையில் சிக்கிய தாதி



02





# நோவா ஸ்கொஷியா மாகாணத்தில் வேகமாகப் பரவிவரும் காட்டுத் தீ

கனடாவின் நோவா ஸ்கொஷியா மாகாணத்தில் காட்டுத்தீ வேகமாக பரவி வருகிறது.

கனடாவின் நோவா ஸ்கொஷியா மாகாணத்தில் வேகமாகப் பரவிவரும் காட்டுத்தீ, சுமார் 2,000 ஹெக்டேர் நிலப்பரப்பை கபளீகரம் செய்துவிட்டது.

ஆனாலும், அந்த வனப்பகுதியில் முகாமிட்டிருக்கும் வீடற்றோர், அங்கிருந்து வெளியேற மறுத்துவருகிறார்கள்.

அரசு அதிகாரிகளும், தொண்டு நிறுவனங்களும் அவர்களை வெளியேற்ற முயற்சிகள் மேற்கொண்டுவரும் நிலையிலும், பலர் அங்கிருந்து வெளியேற மறுத்துவருகிறார்கள்.

காரணம், அவர்களுக்கு அதுதான் வீடு, அது அவர்கள் வசதியாக வாழும் இடம், அதனால்தான் அவர்கள் அங்கிருந்து வெளியேற மறுக்கிறார்கள் என்கிறார் Souls Harbour Rescue Mission என்னும் அமைப்பின் மேலாளரான மேத்யூ ரீட் என்பவர்.


இப்போது வனப்பகுதியில் தங்கியிருப்பது பாதுகாப்பானதல்ல என்பதை அவர்களுக்கு புரியவைக்க எங்களாலானமட்டும் முயற்சித்து வருகிறோம் என்கிறார் அவர்.

வனப்பகுதிக்குள் நுழைவோருக்கும், குளிர் காய்வது போன்ற விடயங்களுக்காக தீ பற்றவைப்பவர்களுக்கும் 25,000 டொலர்கள் அபராதம் விதிக்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

விடயம் என்னவென்றால், வறட்சியான காலங்களில், வீடற்றோர் வனப்பகுதிகளில் வாழும் விடயம் குறித்து அரசியல்வாதிகள் வாயே திறக்கவில்லை. இந்நிலையில், ஏற்கனவே வறுமையில் வாடிவரும் வீடற்றோருக்கு 25,000 டொலர்கள் அபராதம் விதிக்கப்படுவதற்கு எதிராக தொண்டு நிறுவனங்கள் கருத்து தெரிவித்துவருகின்றன.







# எயார் கனடா பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வேண்டும்

## பிரதமர் மார்க் கார்னி தெரிவிப்பு

எயார் கனடா பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டுமென கனடிய பிரதமர் மார்க் கார்னி வலியுறுத்தியுள்ளார்.

எயார் கனடா விமான சேவை நிறுவனமும் விமானப் பணியாளர்களும் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

விமானப் பணியாளர்கள் எல்லா நேரங்களிலும் நியாயமாக நடத்தப்பட வேண்டியவர்கள் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.இந்த பணிப் புறக்கணிப்பு போராட்டத்தினால் ஆயிரக் கணக்கான பயணிகள் சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது என அவர் தெரிவித் துள்ளார்.

இந்த தொழிற்சங்க நடவடிக்கைகளினால் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கனடியர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த பிணக்கிற்கு துரித கதியில் தீர்வு காணப்பட வேண்டுமென இரண்டு தரப்பினரையும் கோருவதாகத் தெரிவித்துள்ளார்.



# சமூக ஊடகப் பதிவினால் சர்ச்சையில் சிக்கிய தாதி

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவைச் சேர்ந்த ஒரு தாதியொருவர் சமூக ஊடகப் பதிவு காரணமாக பெரும் சர்ச்சையில் சிக்கியுள்ளார்.


மாற்றுப்பாலின சமூகத்தினரைப் பற்றி 'வேறுபாடு மற்றும் அவமானகரமான' கருத்துகளை வெளியிட்டதாக குறித்த தாதி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த தாதியின் ஒரு மாத காலத்திற்கு இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் இந்த செயலுக்காக 94000 டொலர் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா தாதியர்கள் மற்றும் குடும்ப நல அதிகாரிகள் (B.C. College of Nurses and Midwives) சங்கம் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏமி ஹாம் என்ற தாதிக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2018 ஜூலை முதல் 2021 மார்ச் வரை பல ஆன்லைன் தளங்களில் ஹாம் வெளியிட்ட கருத்துகள் மாற்றுப் பாலின சமூகத்தினருக்கு எதிரான அவமதிப்பு கருத்துக்களைக் கொண்டிருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.



# பீல் பிராந்தியத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பாதசாரி பலி

கனடாவின் பீல் பிராந்தியத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் பாதசாரியொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து, கவண்ட்ரிசைட் மற்றும் ஏர்போர்ட் வீதிகளுக்கு அருகே இடம்பெற்றுள்ளது.

சமூக ஊடக பதிவில், பொலிஸ் ஒரு பிக்அப் ட்ரக் ஒரு பெண்ணை மோதியதாகவும், அவர் மருத்துவ மனைக்கு அனுமதிக்கப்பட்ட போதி லும் பின்னர் உயிரிழந்துள்ளார் என் றும் தெரிவித்தது.

வாகன சாரதி விபத்து இடத்தில் நின்று விசாரணையாளர்களுடன் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.சம்ப வம் தொடர்பில் பீல் பிராந்திய பொலி ஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் பிரதமர் மார்க் கார்னியுடன் சந்திப்பு

ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட், கனடிய பிரதமர் பிரதமர் மார்க் கார்னியை சந்தித்து பேச்சு வார்த்தை நட்தத உள்ளார்.

ஒட்டாவாவில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

கூட்டாட்சி அரசு அதிகாரி ஒருவர், இந்தஇருதலைவர்களுக்கிடையிலான சந்திப்பில் எந்த அறிவிப்பும் வெளி யாக வாய்ப்பில்லை என்று தெரிவித் துள்ளார்.

கார்னி மற்றும் ஃபோர்ட், வாழ்க் கைச் செலவு, வீட்டு வசதி மற்றும் குற்றம் பற்றி விவாதிக்கவிருக்கின் றனர் என அந்த அதிகாரி கூறியு ள்ளார்.

இந்த சந்திப்பு ஓர் சாதாரணமாக சந்திப்பு என முதல்வர் அலுவலகம் அறிவித்துள்ளது.

அமெரிக்க வரி விதிப்பு காரமாக பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்தும், அரச வரிகளை குறைக்க வேண்டியதன் அவசியத்தையும் போர்ட் பிரதமருக்கு விளக்க உள்ளார் என தெரிவிக்கப்படு கின்றது.